**செய்தி வெளியீடு எண் : 1360** **நாள் : 04.09.2024**

**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 153–வது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்**

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 153–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், 5.9.2024 அன்று காலை 9.00 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

செக்கிழுத்த தியாகச் செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை – பரமாயி அம்மையார் தம்பதியருக்கு 5.9.1872 அன்று மகனாகப் பிறந்தார். ஒட்டப்பிடாரத்தில் அடிப்படைக் கல்வியையும், தூத்துக்குடியில் உயர்நிலைக் கல்வியையும், சட்டக் கல்வியைத் திருச்சியிலும் பயின்று வழக்குரைஞர் ஆனார்.

வ.உ.சிதம்பரனார் அவர்கள், சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தாய் நாட்டின் விடுதலைக்காகத் தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார். அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை. அடியோடு ஒழித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும், "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே "கப்பலோட்டிய தமிழன்" என்று பெயர் பெற்றார்.

வ.உ.சிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காகப் பொதுமக்களைத் தூண்டியதாகவும் வ.உ.சிதம்பரனார் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கினர். இதன் காரணமாக, 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டு செக்கிழுக்க வைக்கப்பட்டார்.

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய்மொழி தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத பற்றின் காரணமாகப் பல அரிய நூல்களையும், சுயசரிதையையும் கவிதை வடிவில் எழுதினார். தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டிமுடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்கு செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், அன்னாரின் 150-வது பிறந்த நாளில் முத்தான 14 அறிவிப்புகளை வெளியிட்டார். அந்த அறிவிப்புகள் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும், தாய் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்தும் வாழ்கிற கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற உறுப்பினர், துணை மேயர், உள்ளாட்சிப் பிரநிதிகள் உட்பட அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu